செய்து பிறகு ரூ. 2,500 ஆகக் குறைக்கப்பட்டது. அதற்குப் பின்னால் மாடியை விட்டுக் கொடுத்ததால் ரூ. 2,000 ஆகக் குறைக்கப் பட்டது. சென்னையைப் பொறுத்த வரையில் அது ஒரு தனிக் கட்டிடமாக இருந்து, வாடகைக்கு எடுத்துக் கொண்டதால், அந்தத் தொகை அதிகமாகவிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் கணக்கிட்டுப் பார்த்த ஸ்பெஷல் ஆபீசர் கூட சதுர அடிப்படி கணக்குப் பார்த்து சரியான வாடகை தான் என்று நிர்ணயம் செய்திருக்கிறார். குறளகம் காதி போர்டிற்கு சொந்தமான கட்டிடம். அதில் வட சென்னைக்காக தனியாக ஆரம்பிக்கலாம் என்ற ஆலோசனையிருக்கிறது.

திரு. சே. பாலசுப்பிரமணிய அய்யர் : இது சரியான வாடகையாக இருக்கலாம். வாடகை குறைவாகவுள்ள வேறு கட்டிடம் பார்க்கக் கூடாதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : சிறப்பு அங்காடியில் இந்த சிரமம் இருக்கிறது. எல்லா பொருட்களும் ஒரே இடத்தில் வாங்கவேண்டுமென்ற அடிப்படையில் இது பெரிய கட்டிடமாக இருக்கவேண்டும். இது பெரியதாகவும், மூன்று மாடியுள்ளதாகவும் இருக்கிறது. ஆகவே வாடகை கூடுதலாகயிருக்கிறது. இப்போது சொல்லப்பட்ட காதி போர்டிற்கு சொந்தமான குறளகத்தில் வட சென்னைக்குத் திறக்கப்பட வேண்டுமானால், அந்த வாடகையை கணக்கிடும்போது, இதைவிட அதிகமாக கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : தலைவரவர்களே, சேலத்திலே உள்ள சிறப்பு அங்காடி கட்டிடம் மாவட்டக் கழகத்திற்கு சொந்தமாகயிருந்து இப்போது அரசாங்கத்தின் கட்டிடமாக இருக்கிறது. இதற்கு இப்போது யார் வாடகை வாங்குகிறார்கள் ? எந்த கணக்கில் வாங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்த கட்டிடம் ஒப்படைக்கும் போது, மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்காகக் கூட்டுறவு அமைப்போடு ஒப்பந்தம் செய்து சர்க்கார் அலுவலகங்கள் வைக்கப்பட்டிருக்கும் மற்ற கட்டிடங்களுக்கு, எவ்வளவு வாடகை என்று கணக்கிடப்படுகிறதோ அந்த அடிப்படையிலும், அங்கேயுள்ள மசால்ஜி, வாட்ச்மென் போன்றவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலும் இதை ஏற்றுக் கொள்வது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

Charitable institutions for physically handicapped persons

*178 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the names of charitable institutions in Tamilnad to help the physically handicapped persons ;

(*b*) the nature of aid given by those institutions to the physically handicapped persons ;

(*c*) the assistance given by the Government to these institutions ; and

(*d*) whether pension will be granted to the physically handicapped persons ?

உறுப்பிழந்தவர்களுக்கு உதவி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழகத்தில் அங்கஹீனர்களுக்கு உதவி செய்து வரும் தர்ம ஸ்தாபனங்கள் எவை எவை ?

(இ) அவை அங்கஹீனர்களுக்கு என்ன உதவி புரிகிறது ?

(உ) அந்த ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் செய்யும் உதவி என்ன ?

(எ) அங்கஹீனர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) கீழ்க்கண்ட தனியார் ஸ்தாபனங்கள் அங்கஹீனர்களுக்கு உதவுகின்றன :—

(1) மெர்சி விடுதி, கீழ்ப்பாக்கம்.

(2) ஈஸ்வரி பிரசாத் தத்தாத்திரேயா ஆர்தோப்பிடிக் நிலையம், ஆந்திர மகில சபா, அடையார்.

(3) ஷிப்ளின் குஷ்ட சானிடோரியம், காரிகிரி, வடஆற்காடு மாவட்டம்.

(4) செயின்ட் ஜோசப் குஷ்ட நிலையம், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம்.

(5) இந்திய குஷ்ட நிவாரண சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

(6) கோயமுத்தூர் அங்கஹீனமும் மறுவாழ்க்கை வசதி வழங்கும் நிலையம், கோயமுத்தூர்.

(7) ரோட்டரி மறுவாழ்க்கை வசதி வழங்கும் நிலையம், அம்மன் சத்திரம்.

(8) செவிடு ஊமைப்பள்ளிக்கூடம், தேனம்பேட்டை, சென்னை.

(இ) மெர்சி விடுதியில் முழு அங்கஹீனர்களாகவும் அனுதைகளாக வும் உள்ளவர்கட்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றன. ஈஸ்வரி பிரசாத் தத்தாத் திரேயா அங்கஹீனர் நிலையம் ஒரு பள்ளிக்கூடத்தை வைத்து அதில் அங்கஹீனர்களுக்கு கல்வி அளிக்கிறார்கள்.

மற்ற ஸ்தாபனங்களும் அங்கஹீனர்களுக்கு வேண்டிய வைத்திய வசதி களை அளிக்கின்றன.

(உ) கீழ்க்கண்ட ஸ்தாபனங்களுக்கு தமிழக அரசாங்கம் நிதி உதவி வழங்குகின்றன :—

(1) ஷிப்ளின் குஷ்ட நிலையம், காரிகிரி—நிலையத்தில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளி நபர் ஒன்றுக்கு ரூ. 18 வீதம் நிதி உதவி பெறுகின்றது.

(2) செயின்ட் ஜோசப் குஷ்ட விடுதி, தூத்துக்குடி—நிலையத்தில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளி நபர் ஒன்றுக்கு ரூ. 18 வீதம் நிதி உதவி பெறுகின்றது.

(3) இந்திய குஷ்ட நிவாரண சங்கம், தென்னார்காடு.—வருடம் ஒன்றுக்கு ரூ. 7,500 வீதம் நிதி உதவி பெறுகின்றது.

(4) ஈஸ்வர பிரசாத் தத்தாத்திரேயா நிலையம், ஆந்திர மகில சபா, அடையார்—1966–67 ஆண்டிலிருந்து பேணுவதற்குச் சிலவு பற்றாக் குறை வருடம் ஒன்றுக்கு 75 சதவீதம் ரூ. 18,000-க்கு மேற்படாமல் நிதி உதவி பெறுகிறது.

(எ) தற்போது அங்கஹீனர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கும் யோசனை இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஆளும்கட்சி தன் னுடைய Election manifesto இல் அங்கஹீனர்களுக்குப் பென்ஷன் கொடுக்கப் போவதாகச் சொல்லியதே, அதை அரசு மறந்து விட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இது மூலக் கேள்விக்கு தொடர்புடையதில்லை.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, குருடு, செவிடு, ஊமை போன்றவர்களுக்குச் சர்க்கார் பள்ளிக்கூடம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தனியாக இது குறித்துக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

5th Mrach 1968[

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : தலைவரவர்களே, அரசாங்க மானியம் பெறும் இந்தச் சங்கங்களை எல்லாம் மேற்பார்வை செய்ய, அரசாங்க சார்பில் ஆடிட் செய்ய, தணிக்கையாளர்கள் நியமித்து மேற்பார்வை செய்தபிறகு அவைகளுக்குப் பணம் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அது பற்றிய விவரம் இல்லை. பணம் கொடுப்பதற்கு முன்னால் கணக்கைச் சரிபார்த்த பிறகு தான் முடிவு செய்யப்படுகிறது.

திரு. எம். எத்திராஜுலு : கை, கால் இழந்தவர்களுக்கு பொய்க் கால், பொய்க்கை வைக்க அரசாங்கம் ஏதாவது உதவி செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மூலக்கேள்விக்கும் இந்த கேள்விக்கும் தொடர்பில்லை.

Family planning surgical operations

* 179 *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state

(*a*) the monthly average of family planning surgical operations done in Tamilnad during the year 1966 ;

(*b*) the respective number of (1) males and (2) females on whom these operations were done ; and

(c) the number of Family planning operations done monthly from 1st March to 31st August 1967 ?

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1966-ம் ஆண்டு தமிழகத்தில் மாதம் சராசரி எத்தனை குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் நடந்தன ?

(இ) (1) ஆண்கள், (2) பெண்கள் முறையே எத்தனை பேருக்கு நடந்தன ?

(உ) 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ம் தேதி வரை மாதந்தோறும் எத்தனை குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைகள் நடந்துள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) ஒரு மாதத்திற்கு சுமாராக 20,900.

(இ) (1) அந்த ஆண்டில் ஆண்கள் 215,430.

(2) பெண்கள் 5,313.

(உ) மார்ச்	9,763
ஏப்ரல்	8,278
மே	7,240
ஜூன்	6,871
ஜூலை	8,719
ஆகஸ்ட்	10,272
மொத்தம்	51,143